**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.519/2022 P.W.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆனந்தகுமார் | த–பெ | ஆறுமுகம் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 54/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | முதன்மை குடிமை மருத்துவர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2025**

**எதிரிகள் ஆஜர்**

----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து காரைக்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 08.06.2016 அன்று காரைக்குடி அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது இரவு 8.20 மணியளவில் சிவகங்கை மாவட்டம் தட்டத்தி புதூர் சின்னகருப்பன் மகன் சின்னய்யா என்ற 26 வயது ஆண் சாலை விபத்தில் அடிபட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவு இன்றி காணப்பட்டார். கீழே கண்ட வெளி காயங்கள் காணப்பட்டது.

1) 15*5 செமீ எலும்பு அளவுள்ள ஆழமுள்ள ஒரு சிதைந்த காயம், வலது பக்க முகத்தில் இருந்து மண்டை ஓடு எலும்பும் முகத்திற்காக மேக்சில்லா எலும்பும் முறிந்து காணப்பட்டது.

2) 3*3*2 செ.மீ அளவுள்ள ஒரு சிதைந்த காயம் வலது காலில் காணப்பட்டது.

3) வலது தொடையில் அசாதாரணமான அசைவு காணப்பட்டது

அவருக்கு முதலுதவு சிகிச்சை அளித்து அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். **விபத்து பதிவேடு அசாஆ 3.** மேலும் இதே வழக்கில் தொடர்புடைய நாகராஜன் என்பவர் 108 ஆம்புலன்ஸில் அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் சிகிக்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதனை செய்த போது

1) 1**1*1 செமீ அளவுள்ள சிதைந்த காயம் இடது கண் புருவத்தில் இருந்தது.

2) முதுகு பக்கம் வழி இருப்பதாக சொன்னார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட மருத்துவஅறிக்கை அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண வகையைச்சார்ந்தது என்று சான்றிதழ் அளித்தேன். **விபத்து பதிவேடுடன் கூடிய**

**காயச் சான்றிதழ் அசாஆ 4.**

**குறுக்கு விசாரணை**

மேற்படி காயங்கள் வாகனத்தில் வேகமாக வந்து கீழே விழுந்திருந்தாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. மதுஅருந்திவிட்டு வேகமாக வந்து கீழே விழுந்திருந்தாலும் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் சம்பவ சமயத்தில் என்னிடம் மருத்துவமனைக்கு வந்தபோது அவர்கள் மது அருந்தியதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.21 15:27:47 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி